# இங்கிருந்து அங்கு

- அனுபவக் கட்டுரை -

எனது பெயர் கிர்ஷாந் குலராஜா. எனது தாய் மொழி தமிழ். எனது தாய்நாடு சிறீலங்கா.
1996ம் ஆண்டு மாசிமாதம் 7ம் திகதி நானும் எனது குடும்பத்தவர்களும் நிரந்தர குடியுரிமை பெற்று, அவுஸ்ரேலியாவில் குடியேறினோம். நான் இங்கு வரும் போது 8 வயதாக இருந்தேன். எனது அப்பாவின் பெயர் குலராஜா. அம்மாவின் பெயர் தேவராதி. எனக்கு ஒரு அண்ணாவும், ஒரு தங்கையும் இருக்கிறார்கள். நாங்கள் சிறீலங்காவின் வட பகுதியாகிய யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தோம். அங்கு எனது தந்தையார் ஒரு பிரபல கம்பனியில் மனேஜராகவும், எனது தாயார் ஒரு பட்டதாரி ஆசிரியராகவும் பணிபுரிந்து வந்ததாலும், அந்த நாட்டில் ஏராளமான சொத்துக்கள் இருந்ததாலும், கௌரவமாகவும், பொருளாதார மேம்பாட்டுடனும் வாழ்ந்தோம். இவ்வாறான நிறைவான வாழ்க்கையைவிட்டு அன்னியநாட்டில் குடியேறியதற்கான காரணத்தையும், அவ்வாறு இடம் பெயர்ந்த காலத்தில் இருந்த மனநிலைபற்றியும் எனது தாயாரிடம் பேட்டி கண்டேன். அவர் கொடுத்த தகவல்களை இக்கட்டுரைக்கு ஆதாரமாக்கிக் கொள்கிறேன்.

எமது நாட்டில் பலகாலமாக அரசபடைகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கு மிடையில் போர் நடை பெற்றுக் கொண்டிருப்பதால் பொதுமக்களின் இயல்புவாழ்க்கையில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டது. கல்வி, உணவு, சுகாதாரம், வைத்தியம், மின்சாரம், போக்குவரத்து போன்ற அத்தியவசிய தேவைகளில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டதோடு, போரினால் உயிர், உடமைகளுக்கும் உத்தரவாதமில்லாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக அவுஸ்ரேலியாவில் ஏற்கனவே குடியேறி வாழ்ந்து வரும் எனது தாயாரின் சகோதரி குடும்பத்தவர்கள் எங்கள் குடும்பத்தையும் அவுஸ்ரேலியாவிற்கு அழைத்து '215 Migration forms' அனுப்பியிருந்தார்கள்.

கௌரவமாக அங்கு வாழ்ந்த எங்களுக்கு சொந்த மண்ணை விட்டு வெளியேற விருப்பமில்லை. உறவினர்கள், நண்பர்களை விட்டுப் பிரிந்து புதிய நாட்டில், சுமுகமாக வாழ முடியுமா? என்ற ஏக்கம். புதிய இனமக்கள், புதிய கலாச்சாரம், பழக்கப்படாத காலநிலை போன்றவற்றிற்கு இசைவாகுவோமா? என்ற அச்சம். வேலைவாய்ப்பு கிடைக்குமா? பிள்ளைகள் தமிழ் மொழி மூலம் திறமையாக தாய் நாட்டில் படித்தவர்கள் ஆங்கில மொழி மூலம் கற்று தகமைகள் பெறமுடியுமா? என்ற பயம்.
இப்படிப்பட்ட போராட்டமான சிந்தனைகள் மத்தியிலும். நாட்டின் போர் அபாயம் காரணமாக மிகவும் வேதனையுடன் அவுஸ்ரேலியாவில் வந்து இறங்கியதாக எனது தாயார் கூறினார்- யாழ்ப்பாணத்தில் நான் எனது செல்லப்பிராணியாக 'ரிங்கி' என்ற நாய்க்குட்டியை வளர்த்து வந்தேன். அதற்கும் எனக்கும் ஒரே வயது. அதைவிட்டு வந்ததுதான் எனக்குக் கவலை.

அவுஸ்ரேலியாவில் புதிய வாழ்க்கை மிகவும் கசப்பான அனுபவமே. புதிய சூழல், புதிய காலநிலை, பல்வேறு இனமக்கள் யாவும் பழகுவது கஷ்டமாக இருந்தது. ஏன் வந்தோம்? திரும்பிப் போவோமா? என்று பலதடவை யோசித்ததாக அம்மா கூறினார். நானும், அண்ணாவும் பாடசாலைக்குப் போகப் பயந்தோம். மொழிப் பிரச்சினை, நண்பர்கள் இல்லாதது கசப்பான அனுபவமாக இருந்தது. என்றாலும் ஆசிரியர்கள் மிகவும் அன்பாகப் பழகியது எமக்கிருந்த பயத்தை விரைவில் அகற்றி விட்டது. (Social security financial support) அரசாங்க உதவிப் பணம் கிடைத்தாலும், மாமா குடும்பத்தவர்களின் உதவியும் இருந்ததால் பண ரீதியான பிரச்சினை இருக்கவில்லை.

காலம் செல்லச் செல்ல படிப்படியாக எல்லாம் பழக்கப்பட்டு விட்டது. கல்வித்துறையில் நானும், அண்ணாவும் முன்னேறி விட்டோம். அப்பாவிற்கும் வேலை கிடைத்து விட்டது.

உறவினர்கள், நண்பர்களும் அதிகம் கிடைத்து விட்டார்கள், வேறு இனமக்களோடும் புரிந்து வாழப் பழகிக் கொண்டோம்.

ஆக்கம் - கிரிஷாந் குலராஜா -

தற்போது எனது அண்ணா Homebush ஆண்கள் உயர்தர பாடசாலை-யில் ஆண்டு 12ல் மிகவும் முன்னிலையில் கற்று வருகிறார். அத்துடன் Home bush தமிழ் கல்வி நிலையத்தினூடாக ஆண்டு 12ற்கான பரீட்சையில் 2001ல் மிகவும் திறமையாக தேறியுள்ளார்.

நானும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான (Selective school) பரீட்சையில் சித்தியடைந்து தற்போது (Fort Street high school) ஆண்டு 9ல் கற்கிறேன். தமிழ் பாடசாலையிலும் ஆண்டு 9ல் கற்கிறேன். அத்துடன், 2001ற்கான சிறந்த மாணவராக தெரிவு செய்யப்பட்டு (minister's Award) கௌரவிக்கப்பட்டேன். எனது தங்கையும் Home bush ஆரம்ப பாடசாலையிலும், தமிழ் கல்வி நிலையத்திலும் ஆண்டு 2ல் கற்கிறாள்.

எனது தாயாரும் அப்பாடசாலையில் ஆசிரியராக இருக்கின்றார்.

பொது அறிவு, கல்வி, விளையாட்டு போட்டிகளில் பங்குபற்றி பல பரிசுகளை தொடர்ச்சியாக பெற்றுவருகிறோம். எமது தமிழ் கலாச்சார நிகழ்ச்சிகளிலும், கோவில் வழிபாடுகளிலும் முன்னுரிமை பெறுகிறோம். இசைக்கருவிகளை மீட்டக் கற்று வருகிறோம்.

புலம்பெயர்ந்து வந்து புகலிடம் பெற்ற இந்த அவுஸ்ரேலியா நாட்டில் ஆங்கிலக்கல்வியுடன், தாய் மொழியையும் கற்று திறமையடையவும், கலாச்சாரங்களை பேணிப்பாதுகாப்பதற்கும் கிடைக்கும் சந்தர்ப்பங்களுக்காக கடவுளுக்கு நன்றி கூறுவதாக எனது தாயார் கூறினார்.

நாட்டைவிட்டு வெளியேறிய போது இருந்த பயமான மனநிலை-யிலிருந்து முற்றிலும் விடுபட்டு மிகவும் மனத்திருப்தியுடனும், மனநிறைவுடனும் மிகவும் சந்தோஷமாக எமது மொழி, எமது இனமக்கள், தமிழ்கலாச்சாரம், பண்பாடு என்பவற்றைப் பேணிப்பாதுகாத்து வாழ்ந்து வருகிறோம்.

நன்றி அவுஸ்ரேலியா!!

"தேன் மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்"

- ஆக்கம் கிஷாந் தவராஜா -